Publication: Tamil Murasu, Pg 1
Date: 1 October 2023
Headline: Shanti Pereira wins silver medal

# வெள்ளிப் பதக்கம் வென்றார் சாந்தி




100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளிப் பதக்கம் வென்ற மகிழ்ச்சியில் சிங்கப்பூர் கொடியை ஏந்தியிருக்கும் சாந்தி பெரேரா.
**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சனிக்கிழமை நடைபெற்ற பெண்களுக்கான 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில், சிங்கப்பூர் வீராங்கனை சாந்தி பெரேரா வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

1974ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சிங்கப்பூருக்கான முதல் தடகளப் பதக்கத்தை சாந்தி, 27, வென்றிருக்கிறார்.
11.27 வினாடிகளில் கோட்டைக் கடந்த சாந்தி, வெற்றியாளரான சீனாவின் ஜி மான்கியைவிட 0.04 வினாடிகளே பின்தங்கினார். பஹ்ரேனின் ஹஜாத் அல் கால்டி 11.35 வினாடிகளில் கடந்து மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

ஜூலையில் நடந்த ஆசிய தடகள வெற்றியாளர் போட்டியில் 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டப்பந்தயங்களில் வெற்றிபெற்ற சாந்தி, தகுதிச்சுற்றின்போது 11.42 வினாடிகளுடன் ஆறாவது இடத்தைப் பிடித்திருந்தார்.